# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.204 /2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 16 | நாள் | : | 01.12.2025 |
| பெயர் | : | வாஞ்சிநாதன் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 01st day of December 2025.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது பழங்கோட்டை கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு திருவேங்கடம் வட்டம் செவல்குளம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தபோது குருவிகுளம் காவல் ஆய்வாளர் வேண்டுகோளின்பேரில் இறந்துபோன லட்சுமணத்துரை என்பவர் பெயர் விவரம் பற்றி சான்று வழங்கும்படி கேட்டுக் கொண்டார். நான் கள ஆய்வு செய்து விசாரித்ததில் இறந்துபோன லட்சுமணத்துரைக்கு பால்துரை என்ற பட்டப் பெயரும் உள்ளது என்று தெரிய வந்தது. எனவே இறந்துபோன லட்சுமணத்துரை என்ற பால்துரை ஒரே நபர் என்று நான் சான்று வழங்கினேன். 02.11.2021 அன்று நான் வழங்கிய சான்று அ.சா.ஆ.22 ஆகும். நான் கள ஆய்வு செய்து விசாரித்தபோது அவரது

சொந்த ஊர் மலைப்பட்டி இந்திரா நகரைச் சேர்ந்தவர் என்று தெரிய வந்தது. பின்னர் சிறிது காலம் சங்கரன்கோவில் காந்தி நகரில் வசித்து வந்துள்ளார். பின்னர் மீண்டும் மலைப்பட்டிக்கு வந்து வசித்துள்ளார் என்று தெரிய வந்தது. என்னை சான்றிதழ் வழங்கியது சம்பந்தமாக ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்களை போலீசார் கேட்டுக் கொண்டதன்பேரில் எழுதிக் கொடுத்த ஆவணத்தின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன் என்றும் எனக்கு லட்சுமணத்துரையையோ பால்துரையையோ தெரியாது என்றும் நான் சொன்ன நாளில் கள ஆய்வு செய்ததாகவும், விசாரித்ததாகவும், அவ்வாறு விசாரணையில் இரண்டு பெயர் கொண்ட நபர்களும் ஒரே நபர் என்று தெரிய வந்ததாகவும் கூறுவது வழக்கிற்காக கூறும் பொய் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.12.01 17:57:23 +0530